விசேஷ விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939

மாசில்வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
பூக வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னேர்தை யினைவடி நீழலே.

விசேஷ விளம்பரத்திற்கு!

[புத்தகம் — ௫௨] யாழ்ப்பாணம்:— விக்கிரம ஞு ஆனி மீ ௧௪௨ (1940 ஜூன் 24 திங்கட்கிழமை). [இலக்கம் ௨௨]

விரோதி வருஷம் (1889 ஆவணி மாதம் 28 - உ தேதி ஆரம்பம்)

பட்டப்பகலில் அட்டியற்கொள்ளை

சங்கானையில் ஒரு மாதின் கழுத்திலிருந்து அறுக்கப்பட்டது

கோட்டில் எதிரிகள் குற்றவாளிகளென ஒப்புக் கொண்டனர்

21-6-40

முன்னால் மரிக்கும் 1, கந்தையா கணேசமூர்த்தி சாலை முதற் 2 வேலுப்பிள்ளை - கணபதிப் பிள்ளை அல்லது அப்புக்குட்டி 3. கந்தையா லபித்திலிங்கம் அல்லது சோமு என்னும் பேர்வழிகளை முறையே பேர்வழி சங்கானியில் வசிக்கும் கணபதிப்பிள்ளை மைந்தன் செல்லம்மா என்னும் அறுபது வயதுடைய ஒரு மாதின் அட்டியல் (ரூ 125 பெறுமதியுள்ளது) பட்டப்பகலில் அறத்துக் கொண்டோடியதாயும், இதற்குமேற் 3 மேர் வழியை உதவி புரிந்ததாயும் அவர்கள்மீது குற்றஞ்சாட்டிச் சங்கானைப் பொலிஸ் சார்ஜன் எம். எஸ். ஜோசெப் மாற்பாணம் பொலிஸ் கோட்டில் ஒரு வழக்கைத் தொடர்ந்தார். இவ்வழக்கில் நீதிபதி செல்லம் என்பவளுடைய வாய்மூலப் பாட்டைப் பதிவு செய்தபின்னர், எதிரிகள் குற்றவாளிகளே அல்லவோ என வினவிய, எதிரிகள் தாம் குற்றவாளிகளென ஒப்புக் கொண்டனர். நீதிபதி எதிரிகளை யைமடைவாய் கொடுக்குமிடங் கட்டளையிட்டுத் தீர்ப்புக்கூறுவதை வருற 28-6-40ல் நிகழ்த்துக் தவணையிட்டார். இத் தீர்ப்பு வரையும், எதிரிகள் விளக்க மறியலில் வைக்கும்படியும் உத்தரவிட்டார்.

மழக்கின் சாராம்சம் வருமாறு:-

கணபதிப்பிள்ளை கைப்பெண்ணை கொண்டு சென்ற ஜூன்மீ 17ல் நிகழ் வழக்கம்போலத் தனது மாடுகளை வீட்டிலிருந்து வெளியான புற்றரைக்கு ஓட்டிச்சென்றார். அப்போது ரூபா 125 பெறுமதியான அட்டியலை அணிந்திருந்தாள். தனது மாடுகளை ஓட்டிச் சென்றபோது எதிரிகள் பார்த்துக்கொண்டு வழியில் நின்றனர். பின்னர் கடுப்பவலமாக சென்று தனது மாடுகளை மேயவிட்டுத் தான் ஒரு மரநிழலில் வந்து வெய்யிலுக்காக ஒதுங்கி நின்றார். அப்போது 1ம் 2ம் எதிரிகள் இருவரும் அவருக்கருகே சென்று 2ம் எதிரி அவளுடைய வலக்கையைப் பிடித்க, 1ம் எதிரி அட்டியலை அறத்துக்கொண்டு நிறிது தூரத்தேகின்றான். மூன்றும் எதிரிமேல் போகப் பின் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டார்கள். சேலைக் சத்தமிட்டாள். இச் சத்தம் கேட்டு அயலிலேநின்று மாடுமேய்ந்த சிறுவன் அங்குவந்ததும் அவனுக்கு இதனைக் கூறினாள். பின்னர் இச் சம்பவம் பெரியாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிசார் விசாரணை செய்தபோது எதிரிகள் மூவரும் மூன்று சபிலிங்களை வாடகைக்கு எடுத்துக்கொண்டு கல்லுகுளிக்கு சென்று அங்குள்ள முதியோர் ஒருவரிடம் அட்டியலை விற்க எதிரிகளின் வாய் மூலமாக அறிந்தனர். ௧.௪

அந்தணரின் மேம்பட்ட அப்பூதியடிகளார்

காழி ஸ்ரீமத். பி. அகோரம்பிள்ளை அவர்கள்

(முற்றொடர்)

அன்றியும், அப்பூதியார் அப்பரைக் கண்ட அக்காலத்தே அப்பர் போலப் பெரும் புகழ் எய்திய அடியார் மற்றொருவரும் உண்டு. அவர் திருஞானசம்பந்தப் பெருமான் என்ற சுண்டிக் குமிக்கலும் வேண்டுமோ? அவர் தம் பெரும் புகழ் பண்டிதமாடும் எம்நினைவை யாவரும் அறிந்தொன்று. அச் சம்பந்தப் பெருமானது பெருப்புகழில் இடுபட்டது அப்பர் பெருமானது பெரும் புகழில் சிறப்பட்டார் அப்பூதியடிகள். இதற்குக் காரணம் எண்ணியெனின், அப்பூதியடிகளார் அப்பர் தம் திருத்தொண்டின் பெருமையைச் சம்பந்தரை அறிதற்கு முன்னமேயே அறிந்த அமையாமாகும். அன்றியும் 'போர்குடைற் கண்மிதப்பிற் போர்த்தேறிய' பெருமையே அப்பூதி யடிகளைப் பிணித்தது. அவ்வறுபதாச செயல் நிகழ்ந்த காலத்துக்கும், சம்பந்தர் திருமணப்பரவல் உண்ட காலத்துக்கும் இடையில் ஏறக்குறைய இருபது வருஷ காலமாவது ஆகியிருக்கும். அக்கால அளவை நண்டுத் தாக்கப்புகுவை கட்டுவை பெருகுதலோடு மற்றொரு விரித்தலாம் என்றதாலே வரை விடுத்தல் செல்கிறேன். எனவே, அப்பர் பெருமான் கல்மிதப்பிற் போர்த்தேறிய காலத்துச் நடந்த காலத்துக்கும் சிறு மூத்த மடை பிறந்திருக்கலாம். அன்றியும், நான்கு மக்கள் இவருக்கு இருதல் வேலாமென்று முன்னதே கூறியுளேம். ஒரு குழந்தை பிறந்த முதலாண்டிலாவது குழந்தை பிறந்தே வரையிலாவது இடைப்பட்ட காலம் மூன்று வருஷ காலமாகலாம். எனக் கொள்ளின் முத்த மகனுக்கு 12 வயதேனும் ஆகியிருத்தல் வேண்டும். ஆகவே, அத்தகையேனைத் தனிவிட்டார் என்று குறப்பிற்தார் எனல் பொருத்தமாகத் தோன்றவில்லை.

துனி தனி என்ற பதம் மிகுனப் பொருப்பட்டதுஎன்றுகூறுதல் நமுமோர் இங்கற்றுக் சேர்கிறோருக்கு அமையுமோர் அமையும் எனிர் காமுக ஆகுமோர்? எனவே உண்மையைக் கண்டறிவது நம்மவோர் கடமையாகும்.

'தனி' எனின் 'இவர்களை விட்டுத் தனிப்பட' (அதுபவினர்) என்று பொருள்படலாம். அரவு கடித் நிறந்ததால் தனிப்பட்டன எனினும், பினைர் உயிர்பெற்றெழுதலி னால் தனிப்பட்டான் ஆனான் அன்றோர் ஆகவே, இப்பொருளும் சிறப் புடைத்தாகாது.

தனிப்புரிப் அடையுமாறு விட்டார் எனினோ பொருந்தும். நல்ல தாய் தந்தை நிலவ காளினது செயப் பெற்றேன் என்றும், அருந்தவர் அமுது செய்யத் தாழக்க யான் அறையேன் என்றும் எண்ணிய தால் நிறுதிய சுருத்துடையன் அவன் என்று தெரிகிறது. ஆகை யால், மற்றெல்லா மைந்தரினும் தனிப்புரிந் அடையுமாறு விட்டார் எனல் சாலப் பொருத்தமுடையதாகச் சாலப்படுகின்றது.

அன்றேல், நிருகாவுக்கரசர் அமுது செய்ய வந்தபொழுது பூதி சாத்தியக்கால் 'முத்த சேயைக் காட்டுக' என்று கேட்டார். முத்தநிருகாவுக்கரோ அரவுகடித்திறந்ததான் ஆண்டிலே. ஆகலின், தனியாக எடுத்துக் கேட்கப்படுமாறு விட்டார் எனினும் பொருந்தும்.

பிறகு நகவிக்குருத்தைகாரிர்தான் அவன் அரசாதிண்டிய விஷயம் மக அற்புதமாகவே இருக்கிறது. 'தம் கையில் நீணடிந்ற' என்ற அப்பூதி யடிகளுமுர் புராணத்துட் கூறப் பட்டது. தகம் + கை = அங்கை என்ற புணரும். பரம்பு கடித்தோர் மையாது கையிலும் சுற்றிக் கொண்டது. அதை எடுத் வீழ்ந்தி 'விடம் தலைக்கேறுமுன் நான் குருதனை வேலமாகச் சென்று கொடுப்பேன்' (அப்பூதியடிகள் புராணம் செ. 25) என்று வேலமாக உள்ளே சென்றான். சென்றவன் தாயார் வாயில் கொடுக்கவில்லை. தாயார் காததினில் கிட்டினான். (திருநாவுக்கரசு மாயனார் புராணம் செ. 206) அவன் பெற்றதாக சொல்லும் சேரமும் அவனுக் கிறக முடியவில்லை. அத்தாயர்பால் வைத்துப் படிமேல் வீழ்ந்தான். தாயர்பால் எளிவி தாயர் மருங்கில் அல்லது தாயர் இடத்தில் எனப் பொருள் கோடலே பொருந்தும். தாயர் கையில் என்று பொருள் தருவதுபொருந்தாதெனத் தோன்றுகின்றது. இவ்வளவு கூர்மையாகச் சரித்திரத்தைச் சொல்லிச் சொல்வல் சேக்கிழாருடைய புலமைத் திறத்துக்குச் சான்றாகு மன்றோ?

இவ்வாறு விழுக்கண்ட பெற்றோர் கெட்டொழிந்தோம்; துயவர் அமுது செய்த தொடங்கார் என்று கொள்ளித்தார். இவ் வைக்தா சீரளில் கூறிய விஷயத்தை அப்பூதியடிகளுடைய புராணத்தில் விரிவாக இரண்டு செய்யுட்களில் ஆசிரியர் உரைத்தார். பெற்றோர் உதிரம் சீரார் வடிவாய் மேனி விளங்கிய குதிபுக் கண்டு விடத்தினால் வீந்தான் என்று அறிந்தனர். வீந்தானாயின் இறந்தான் என்று பொருள் படும். எனின்? இறந்துபட்டிருப்பின் அந்தணரில் மேம்பட்ட அப்பெரியார் பிணத்தை வைத்துக் கொண்டு அருந்தவருக்கு அமுதுபட இசைவரோர்? இசையார். பிணம் இருப்பின் ஆசௌசம் (தீட்டு) அன்றோர் ஆலின் தவ்வாறுசெய்ய அப்பூதியார் உடன்பட்டிரார். விடத்தினால் அவன் இறந்திரான். அவ்வளவு நீங்கிரத்தில் அரவு கடிக்கப்பட்டார் இறப்பதினால்; உயிர் நீங்கக் கொஞ்ச காலிலைகளேயும் செல்லும் போதும். தளர்கது வீழ் மகனைக் கண்டவர் விடத்தினால் வீந்தான் என்று குறிகளால் அறிந்தார்கள். தளர்த்தவிழ் மகனைக்கண்டவர் அவன் கீழே விழுந்ததற்குக் காரணத்தைக் குறிகளால் அறிந்து விடத்தினால் வீழ்ந்தான் என்று முடிவுபட்டியிருக்கலாம். ஆகவே, அப்பூதியடிகளுடையர் புராணத்து 258ம் செய்யுளில் விடத்தினால் வீழ்ந்தான் என்று இருப்பின் சாலவும் நன்று. ஆனால், நிருகாவுக்கரசர் புராணத்துள் தமபுலவன சவம் மறைத்து என்று கூறியிருத்தலுக்குப் பதிலாகுற இயலாது.

என்னே! அன்பின் மகிமை! தம் புதல்வனைப் பாராதுமட் செய்து முடிப்பார்பால் வந்து யதொரு சலனமும் காட்டாது, அமுது செய்ய அமுதாதனர், அவ்வழைப்பில் தம்கண் உற்ற துன்பங்கள் குறித்த தமை யயத்துணரலாகும். 'அமுது செய்து எம்முடிமுழுதுய்க்க கொள்வீர்' என்று வேண்டினர். அவர் தம் குடும்பத்தில் நிலைகண் விடத்தால் வீழ்ந்தமை வட்டோண்டு 'அவனும் உயமுமாறு அமுக்கிவைத்தல் வேண்டும்' என்று பொருளுபடுமாறு குறிப்பிக்கப்பட்டமை காண்க.

யாசோர் உள்ளன்னோர்; பரதம் எனவிளங்கிக் கொண்டார்; நல்ல பேடிதில் வீற்றிருந்தார், விஷ்ணு தான் அணிந்து அப்பூதியாருக்குப் அவர் மனையியாருக்கும் கண்டபின் ஆண்டிருந்த புதல்வர்க்கும் அளிக்கும்போது இவர்க்கு முத்தவனை காட்டு என்று கேட்டார். அப்பொழுது அவர்கள் இவ்வு அவன் உதவான் என்றனர். அவ்வுரை

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

பெண்சோர வழக்கு

கோட்டில் பெண் கூறிய சாட்சியம்

மேல் விசாரணை
தவணையிடப் பட்டது

21-6-40

சிவியாதெருவில் வசிக்கும் வல்லிபுரனம் அவ்வூர் அப்பையரவின் 16 வயதுக்குட்பட்ட மகள் நிரோசம்மாவை களவாகக் கடத்திச் சென்றதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கில் குறித்த ஞானமும் நிரேசம்மாவும் இன்று கோட்டில் வந்து வெளிப்பட்டனர். அப்போது நிரேசம்மா நீதிபதிக்குக் உறிய வாய்மூலப் பாட்டின் சாராம்சமாவது:-

என்னைறெறிஞுவென்று அழைப்பதுமுண்டு. எனது பெற்றோர்களுக்கும் இரண்டு பெண்களுமுண்டு. என்னுடைய தகப்பனார் மணனுரில் இருக்கிறார். நான் எனது தாயாரோடு சிலித்து வந்தேன். நான் எனது தாயாருடைய வீட்டை விட்டு வெளிக்கிடுவதற்குமுன்னர் எனது மாமனார் செல்லத்துரை அவருவந்து என்னை அடித்தார். அவர் இப்படி அடித்தது நான் ஞானத்தோடு களைத்துக்கொள்வதால் தான் என்று அவர் எனக்கு அடித்தபோது நான சாத்தப்பட்டேன். இச் சம்பவத்திற்கு ஒரு மாசத்திற்கு முன்னர் ஞானத்திற்கும் எனக்கும் விவாகப் பேச்சுக்கள் நடத்தது. அப்போது எனது தாயார் அதற்கு உடன்பட்டிருந்தார். பின்னர் மறத்தார். ராவ்கள் இருவரும் பேச்சுக்கால் தொடங்கிய காலம் தொடக்கமாகச் கிளிநொச்சியில் தொடர்ந்தோம். இச் சம்பவத்தன்று இரவு 8 மணியளவில் நான் எனது தாயாருடைய வீட்டை விட்டு வெளிக்கிட்டுத் தனியே அருசனக்தழுவிலிருக்கும் சிதேவி வீட்டுக்குச் சென்றேன். சிதேவி எனக்குப் பாட்டி முறையானவள். நான் சிதேவிவீட்டிற்குச் சென்ற அதுத்தகால் ஞானம் அங்கு வந்தான். நான் இன்றுவரையிலும் சிதேவி வீட்டில் இருந்து வருகிறேன். ஞானம் பிற்பகல் 7 மணிக்கு அங்கு வந்து 9 மணியளவில் தனது வீட்டிற்குச் சென்றுவிட்டான்.

இதன்பின்னர் நீதிபதி நிரேசமாவைக் கொண்வொன்ற மடத்திற்கு அனுப்பி வைத்து ஞானத்தை ரூபா 250 பிணையில் விட்டு வழக்கை மேல விசாரணைக்காக வருஷற 2-7-40ல்கூடிக் தவணை விட்டார். ௧. தி.

சிலாபம் கோட்டில் அபின் வழக்கு

சிலாபம் ஜூன் 20

கேற்று பேரன் விடுமுறையாக இருந்தமை சிலாபம் பொலிஸ்கோட்டில் இரவு 7-30 மணிவரை நா அபின் வழக்கு விசாரணை தொடர்ந்து நடத்தப்பட்டது.

பொலிசாரும் மதுவரியாளன அதிகாரிகளும் சோர்ந்து கல்தான் மனைக் என்பவரின் வீட்டிற் சோதனை நடத்தி அபினைக் கண்டு பிடித்ததாக இவ்வழக்கிற் கூறப்பட்டது.

110 கிராம் அபினுடன் ஒரு கிலோ ரெட் பெட்டியும் அபின்வைத்து நிறுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இரு தராசுத் தட்டுகளும் சோட்டிற சமர்ப்பிக்கப்பட்டன.

மதுபரிபாலன இன்ஸ்பெக்டர் திரு. டி. சோமசுந்தரம் சாட்சியங் கூறும்போது மாதம்பைப் பகுதியிலுள்ள "பழைய நகரம்" என்ற இடத்தில் தரங்கை குறித்த பரிசோதனையை நடத்த வெட்டாமல் நடுத்தரமாகவும் தெரியித்துக்கொண்டார்.

எதிரியின் சார்பாக மதுப்பரிசோதனை பற்றிய வழக்கள் தரப்பிற கூறப்பட்ட விபரம் உண்மையல்ல வென்று கூறப்பட்டது. அதனோடு எதிரிக்கு மீரலெப்பை என்று ஒரு சகோதரர் உண்டெனவும் அவர் எதிரியைப் போலவே இருப்பாரெனும் தெரியித்துக்கொள்ளப்பட்டது.

இரவு 7-30 மணிவரை விசாரணை தொடர்ந்து நடைபெற்றதன் பின்னர் மற்றைய விசாரணை இம்மாதம் 24-ம் வரைதவணையிடப்பட்டது. நாம் போலவும் நிருமித்து ஒளி

இயற்கையின் கூத்து

'மாரார்'

இயற்கையை மன்கையாகப் பாவித்து, அவன் அன்னையும் அழகையும் பலவாறாகப் பண்பாடுதிப் பாடுவது கவிகளின் மரபு. மதியும் மடுவும், மூமனமும் பசும்புல்லும், மயிலினது தோலகயும், குயிலினது குரலும், கதிரவன் கிரணமும், வெண்மதியின் கிலவும் அனுதினமாகாத தெவிட்டாததேன் போல் வருவனவிவை வழங்கி வருகின்றன. அப்படியே இயற்கை யன்னை நம்போலியருக்கு ஜீவகாருணியத்துடனே இனிப்பான கனிகளையும், உணவுக்கேற்ற பற்பல தானியங்களையும், பொன் வெள்ளி முதலிய உலோக வகைகளையும் அளித்து உதவுகிறாள் என்று கண்டு செலுத்துவோருமாம் உளர். இயற்கைத் தேவி கிளக்கொண்டு புவியை விட்டுப் புள்ளிமானைக் கொல்லுமுன்னர், பூமியைப் புகுக்குஞ் பின்மேற் பாயவிடுவதையும், யுத்த களத்தில் ரத்த வெள்ளம் பெருகச் செய்வதையும், மனக் கண்ணால் கண்டு கடுகி அவளை மகாகாளி என்று பணிவோமையும் பாரத்திருக்கிறோம். ஆனால் அவ்வியற்கை யன்னை நகைச் சுவை கொண்டு கோரணிகள் செய்து, உலகத்திலுள்ள ஜீவராசிகள் படும் கஷ்டங்களைக் கண்டு வகைத்துப் பரிகசித்து வருவதை உணர்ந்தோர் நிலமே.

மாலைவேளையில் ஆகாயத்தில் தோன்றும் மேகங்களைச் சற்று நேரம் கவனிப்போமானால் சில சமயங்களில் ஒரு மேகம் மனிதன் முகம்போல் உருக்கொண்டிருக்கிறது. பின் ஒரு விநாடிக்கள் அது குரங்கு முகம்போல் மாறுகிறது. நாம் பார்த்துக்கொண் டிருக்கும்போதே அது ஒரு மலைபோல் மாறிக்தோன்றுகிறது. இயற்கைத் தேவி வானத்தில் பலவிதச் சித்திரங்கள் அமைத்துக் காட்டிச் சிரிக்கிறாள்.

ஒரு பெரிய பாலவனத்தில் ஒரு வன் நடந்து செல்லுகிறான். ஞாயன் ஆகாயத்திலிருந்து தீக்கணைகளைத் தெறிக்கிறான். கனமான வெண்மணல் காலின்கீழ்க் கண்ணீர்ப் பறிக்கிறது. பாதசாரி வியர்த்து வாடிக்கிளைத்துத் தாகத்தால் தண்ணீர் ஒரு நிலவே'எங்கே கிடைக்குமென்று சுற்றுமுற்றும் கண்ணுறுற்று சோக்குகிறான். 'ஆகா! அதோ நீர்நிறைந்த ஓர்ஏரி புலப்படுகிறது. கடவுள் என்றோ இரங்கியுள்ளார்; அங்கே போய் என் தாகத்தைத் தீர்த்துக்கொள்வேன்' என்றான் தள்ளாடத் தள்ளாடச் செல்கிறான். போகப்போக ஏரியைப் காணவில்லை. நீரையும் காணவில்லை-மரங்களின் நிழல்கள் அங்கிங்கே தோன்றினதும் பொய். இது ஒரு கானலின் பேரலை தோற்றமாம் என்று அறிந்து மனங்கலங்குகிறான். இயற்கைத் தேவி கைகொட்டி கைவரிடுகிறாள்.

இன்று நினைசரிப் பத்திரிகையில் "விரோதபுரம் என்ற ஊரில் ஓர் எருமைக்குத் தலை யிரண்டும் உடலொன்றுமான கன்று பிறந்தது. அதைப் பார்க்க ஜனங்கள் நூற்றுக்கணக்காக வந்தார்கள்" என்று ஒரு நிருபர் எழுதுகிறார். இதுவும் இயற்கையின் ஒரு கோணியல்வரர் ஆறடி உயரமுள்ள புருஷனுக்கும் ஐந்தரையடி உயரமுள்ள ஸ்திரீக்கும் இரண்டடி உயரமுள்ள குள்ளமான மகனுக்கு சிருஷ்டித்து அவனைப் பார்க்கிறவரெல்லாம் நகைக்கச் செய்கிறாள். மற்றும் மோரியான நன்தைக்கு மூடனான மகனைக் கொடுத்து மகிழ்கிறாள்; எட்டிப் பழத்துக்குக் கண்டேர் கனத்தைக் கவரத்தக்க உருவத்தையும் நிறத்தையும் தந்து கொடிய வைப்பையும் விஷத் தன்மையையும் உள்ளே ஒளித்து வைக்கிறாள். இவைப் பூச்சிகளை இவ்வேலையும் அதன் மேன்று சோலியில் தேங்காய் (தொடர்ச்சி 4-ம் பக்கம்)

புதன் (Mercury)

ரோம ஸ்ரீ சி. கப்பிரமணியமுர்
திருக்கணித புஞ்சாங்கம்
ரோக நிலையம்

சூரியனுக்கு மிகச்சமீபமாகவுள்ள கோளம் புதனாகும். இது எல்லாக்கோள்களினுஞ் சிறியது. இது மந்தோச்சத்தில் (Aphelion) 4 கோடியே 30 லட்சம் மைல் தூரத்திலும் கேந்திரோச்சத்தில் (Perihelion) 2 கோடியே 80 லட்சம் மைல் தூரத்திலுமிருக்கிறது. இதனுடைய விட்டம் 3000 மைல். புதன் சூரியனை ஏறக்குறைய 88 நாட்களில் ஒருமுறை சுற்றுகிறது. சூரியனைச் சுற்றி வருகிற 88 நாட்களில் புதன் தனியாயும் ஒருமுறை சுற்றுகிறதாகச் சில கருதுகிறார்கள். இக்காரணத்தால் புதனுடைய ஒரு பாகம் எப்பொழுதும் பிரையும் உஷ்ணமுமுடையதாக விருக்கிறது. மற்றபாகம் இருட்டும் குளிருமுடையதாக விருக்கிறது. சூரியனுக்கு எதிரே இருக்கும் பாகம் 350பாகை உஷ்ணமுடையதெனக் கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வளவு உஷ்ணம் இருந்த போதிலும் புதனைச் சுற்றிப் பனனுஞ் செறிந்திருத்தல் மழைக்கத்திற்கு இவ்வுஷ்ணம் தெரிய முடியாமலிருக்கிறது. ஒரு பாகம் அதிக உஷ்ணமும் மறுபாகம் அதிக குளிருமுடையதான பூமியிற காணப்படும் உயிரனுக் தாவரங்களும் புதனோர்திற் காணப்படமாட்டா.

புதன் எப்பொழுதும் சூரியனுக்குச் சமீபத்திலிருப்பதால் அதைக் காண்பது மிக அரிதாகும். கொப்பர்னிகஸ் (Copernicus) என்னும் வானசாஸ்திரி இறக்கும் பொழுது தான் புதனை ஒருக்காலுங் காணுதிறமிலேனென்று கவலையுடன் கூறியதாகவும் ஒரு கதையுண்டு. இது காலவேளையிராகவும் மாலை வெள்ளியாகவும் தோற்றும்பொழுது மாத்திரம் அதை இங்குமிற் காணலாம். காலை வெள்ளியாக (Morning Star) தோற்றும் காலத்தில் அது சூரியன் உதிக்கச் சில மணித்தியாலங்களுக்கு முன் கிழக்கே உதயமாகி, சூரியன் உதயமானதும் மறைந்து விடும். மாலைவெள்ளியாக Evening Star தோற்றுங்காலத்தில் சூரியன் அஸ்தமித்தும் மேற்கு வானத்திற் தோற்றி சில மணித்தியாலங்களின் பின் மேற்கே அஸ்தமித்து விடும். இக்காரம் கண்ணிலிருந்து ஒருபோதும் தோற்றவில்லை. எனவே பூமியிலிருந்து பார்க்கும் பொழுது புதன் சூரியனிலிருந்து அதிகம் பிரிந்து காணப்படும் தூரம் 27 பாகை தூரத்திற்கு மேற்படுவதில்லை. புதன் தோற்றல காலங்களில் அதனைத் தூரநோக்கி வண்ணுடி மூலம் பார்த்தால் பிறைத் தோற்றமுடையதா யிருத்தலைக் காணலாம்.

புதன் சென்னும் பாதையானது பூமியிடையே பாதைக்குன் மறைக் கிருப்பதால் சில காலங்களில் புதன் சூரியனுக்கும் பூமிக்குமிடையே வருகிறது. இவ்வாறு வரும் பொழுது புதன் சூரிய பிம்பத்தில் கரர்கு தெல்லாபோல் தோற்றம். இத்தோற்றத்தைப் புத சங்கிரமணம் (Transit of mercury) என்பர்.

இத்தோற்றத்தை வெற்றுக் கண்ணாற் பார்க்க முடியாதாயும் முற்காலத்திலேனர் இதைக்கவனித்த தில்லை. கஸண்டி (Gassandi) என்னும் பூதநூல் வல்லுனர் (Physicist) தான் 1631-ம் வருடம் வசம்பர்மாதம் 7-ம் திகதி இதை முதன் முதற் கண்டார். இவ்விதமாட்டி கிகழும் என்பதை முன்னதாகவே கெப்லர் (Kepler) என்பவர் கணிதமுலம் தெரியித்திருந்தார்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கநன்னாலி வேந்தனுமோங்குக
சூழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

யாழ்ப்பாணம் லிக்கிரம ஞு ஆனிமீ கக௨. திங்கட்கிழமை

இந்து சாதனம்.

குற்றங்கள் அதிகப்படுதல்

இலங்கைச் சிறைச்சாலைத் தலைவர் சென்ற 1939ம் ஆண்டிற் சிறைப் பரிபாலன விஷயமாக எழுதிய அறிக்கையிற் வெளிவரலாயிற்று. இதனைப் படித்துப் பார்க்குமிடத்தில் முந்திய ஆண்டுகளைக் காட்டிலும் குறித்த 39ம் ஆண்டிற் பலவகையான குற்றங்கள் காரணமாகச் சிறையிலிருந்தோரின் தொகை இந்த இலங்கையில் அதிகப்பட்டிருந்ததைப் பார்க்கலாகும். சிறை புகுந்தோரின் தொகை 31497 ஆகும். அதாவது 38ம் ஆண்டிற் சிறை புகுந்தோரின் தொகையைக் காட்டிலும் 1678 பேர் மேலதிகமாகக் காணப்படுகின்றனர். இப்படிச் சிறையுற்றோருள் கடன் முதலிய குற்றங்கள் காரணமாகச் சிறை புகுந்தோரைவிட அடிபிடி சண்டைகொலை முதலிய பாதகமான குற்றங்கள் காரணமாகச் சிறைத் தண்டனை பெற்றோரின் தொகை 1563 பேரேயர். 38ம் ஆண்டிலும் பார்க்க இப்படியான பெருங் குற்றஞ் செய்தவர்களின் தொகை 527 அதிகமாகும். கொலைசெய்து சிறைத் தண்டனை விதிக்கப்பட்டோரின் தொகை மாத்திரம் 190 ஆகும்; அதாவது 38ம் ஆண்டிலும் பார்க்க 39ம் ஆண்டில் கொலைக் குற்றவாளிகள் 43 பேர் அதிகரக்க காணப்படுகின்றனர். கொலை முதலாம் பாரிய குற்றங்கள் செய்வோரின் தொகை மாற்றுக்கு 50 விகிதம் அதிகப்படுகிறதெனச் சிறைச்சாலைத் தலைவர் தமது பரிபாலனப் பிரதியில் அறிவிக்கின்றார்.

இப்படி ஆண்டுதோறும் சிறைத்தண்டனை பெறுவோருடு சிறைவாசஞ் செய்வோரும் அதிகப்படுதற்குக் காரணம் அநேகர் அபாரதமிறுக்க இயலாமையாற் சிறை புகுதலேயாகுமெனச் சிறைச்சாலைத் தலைவர் கூறுகின்றார். அதுவும் ஒரு காரணமாக இருக்கக் கூடும். ஆனால் அபராதம்விதிக்கப்படுதற்குக் சிறைத்தண்டனையடைதற்குங் காரணம் குற்றங்களேயாகும். இக் குற்றம் அதிகப்படுதற்குக் காரணமென்னவெனப்பே — நாம் யோசிக்கவேண்டியது. இக் காலத்திலே தெய்வநம்பிக்கையும் மனுநீதிக்குப் பயமும் தேய்ந்து வருகின்றன. இவைகளுக்குக் காரணம் சமயநூற் கல்வி, நீதிநூல்கள் எச்சமய விதியாசாலைகளிலும் போதிய அளவிற்கு ஊட்டப்படாமையேயெனலாம். தெய்வங் கொழுகை பெரியாவைப் பேணுமை, "எங்கள் மூதாதையரைக் காட்டிலும் நாங்கள் அறிவிற் கூடியுள்ளோம்" என இக்காலத்து வாலிபர்கள் கொண்டுள்ள மௌட்டிகமான எண்ணம், சமயோசாரம் தேசாசாரனங்களிப் பொருட் படுத்தாமை, அரசியலைப்பற்றி அறியாமை விருந்துகொண்டு அதிலே புகுந்து இடர்ப்படுதல் சுயபாவனை அறிவின்றி அரசியல் பரைவிலை மாத்திரம் அல்ப்பு தேர்ச்சி யடைந்திருத்தல் முதலிய வரவின் கொள்கைகளும் விபரீதங்களுமே இப்படிக் குற்றங்கள் நிமைகள் அதிகப்படுதற்குக்காரணமாகுமெனறு கொல்லுதல் மிகை யாகாது. தொழிலின்மை பணப்பஞ்சம் முதலியனவும் குற்றங்கள் தலைப்படுதற்குக் காரணமாம். குற்றங்களை விருத்தியடைய வொட்டாது தடுக்கவேண்டுமேயானால் இந்நாட்டிலுள்ள கலாசாலைகளில் இக்காலத்தில் ஊட்டப்படும் பயனற்ற விபரீதக் கல்வியை அறவே யொழித்துச் சமயத்திற்குஞ் சாதிக்குமுரிய கல்விகளைத் தாய்மொழி மூலமாகவும் அரசினர் பாஷை வாயிலாகவும் விருத்தியாக்குதல் வேண்டும்.

*

பிரான்வின் சமாதானம்

பிரான்ஸியபக்கலாக,பிரான்ஸிய சேனுபதியாகிய ஹென்றி லிக்கர் என்பவரும் ஜர்மனியர் பக்கமாக சேனுபதி வொன் கெயிற்றல் என்பவரும் பிரான்ஸிய ஜர்மனிய சமாதானபிரதிநிதிகளாகப் பத்திரத்திற்கு, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வியாழ்புறம் தத்தம் கைச்சாத்துவைத்த விட்டார்களாம். அத்தச்சமயத்தில் ஜர்மனிய சேனுபதியாகிய வொன்கெயிற்றல் யுத்தத்தில் மாண்ட ஜர்மனியரின்னிய போர்வீரர்களை விட்டு அநுதாபத்தோடு கூடிய ஒரு பிரசாரணத்தைச் செய்து தம் பிரசாரணத்தினுலபிரான்ஸியரையும் சிறிது ஆறுதலடையச் செய்தனராம். சமாதான நிபந்தனைகளின் விபரம் இன்னும் வெளிவரவில்லை. மேலும் இப்படியான ஒரு சமாதான நிபந்தனை இத்தலைவருக்கும் அங்கீகாரமான பிறகுதானும் இரு பகுதியார்க்கு மிடையேயுள்ள பகமை அறவேயொழியுமென நேற்று வந்த தந்திச் சமாசாரங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது. இந்தச் சமாசாரங்களைக் கொண்டு நாம் யூகிக்கக்கிடப்பதென்ன? பிரான்ஸியரும் முந்திய ஏனைய நாட்டினரைப் போல் ஹிட்லருடனும் இத்தலையருடனும் சமாதானஞ் செய்து கொள்ள எங்கள் பிருத்தானியரே ஜர்மனியருடன் எதிர்த்து உலக சமாதானத்தின் பொருட்டுச் சமர் புரிய நேருமென நாங்கள் எதிர் பார்க்கவேண்டும். பிருத்தானியரை எதிர்த்துத் தோல்வியுற்ற சாதியினரின் வரலாறுகளைத் தேசசரித்திரங்களிற் படித்தோமேயல்லாமல், பிரித்தானியரை ஒருவர் வென்றார் என்று அச் சரித்திரங்களில் நாம் படித்ததுமில்லை, யாருஞ் சொல்லக் கேட்டதுமில்லை. இப்பொழுதும் எங்கள் பிருத்தானியர் தெய்வத்தின் அருளைப் பெற்றும் தங்கள் சீதியைப் படைத்தணியாகக் கொண்டும் ஹிட்லர் முதலாம் பகைவர்களைப் புறங்கண்டு வென்று உலக சமாதானத்தை நிலைநாட்டியைப்பொன அவர்களுடைய விசுவாசமான பிரசைகளாகிய நாங்கள் விருப்பித் தெய்வத்தைப் பிரார்த்திக்கின்றோம்.

காப்பைக் களவாடியதாக வழக்கு

எதிரிக்கு ஆறுமாதச் சிறைத்தண்டனை

20-6-40

சாவகச்சேரியில் வசிக்கும் கதிரவேலு கனகபிரியனென்னுமுதுமையதக் குழந்தை முணாதினதினின் காப்பைக் களவாகக் குறற்றியதாகக் கொட்டகையில் வசிக்கும் காதையா அமிர்தலிங்கம் என்பவன் மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஆறுமாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது. ந. வி.

காந்திஜி கருத்துக்கு ஆதரவு

தற்போது சட்டமறுப்பில்லை

மகாத்மா தீர்மானம் தயாரிக்கிறார்

காரியக்கமிட்டியில் தலைவர்கள் ஆலோசனை

வார்தா, ஜூன் 18—

காங்கிரஸ் காரியக்கமிட்டி இன்று பகல் மீண்டும்கூடி நான்கு மணி நேரம் ஆலோசித்தது மகாத்மாவும் வந்திருந்தார். கருக்காக ஒரு தீர்மானம் இன்று தயாரிக்கப்பட்டு அதைப்பற்றி விவாதம் நடந்ததாகத் தெரிகிறது. காங்கிரஸ் கமிட்டியின் முடிவை அறிவிப்பதாகக் காங்கிரஸ் கலைவர் பத்திரிகை நிருபர்களிடம் அறிவித்தார். விவாழ்கிழமைக்குள் கமிட்டிக் கூட்டம் முடிந்துவிடுமெனத் தெரிகிறது. தற்கால ராஜீய நிலையைப்பற்றியும், யுத்த நிலைமையைப் பற்றியும் இன்று விசேஷ விவாதம் நடக்கிறது. இனி இந்த விவாதத்தின் முடிவை ஒரு தீர்மான ரூபமாக வெளியிட வேண்டியது தான் பாக்கி. இதுவரை நடந்த விவாதத்தைக் கவனிக்கையில் காங்கிரஸ் போக்கில் எவ்விதக் மாறுதலுமேற்படாதென்றே தெரிகிறது. சென்ற கூட்டத்துக்குப் பிறகு காங்கிரஸ் மனப்பான்மையை மாற்றிக் கொள்வதற்கான சம்பவங்கள் எதுவும் நடக்கவில்லையென்றே பெரு தலைவர்கள் கருதுகிறார்கள்.

காங்கிரஸ் ராம்காரில செய்த முடிவினின்றும் பின் வாங்குவதாச்சிலர் கூறுவதற்கு மகாத்மா ஹரிஜன் பத்திரிகையில் சென்றவாரம் "இரண்டு கட்சிகள்" என்ற தலைப்புடன் எழுதிய விபரம் நெந்த பதிலாகும் எனப் பலரும்அபிப்பிராயப் படுகிறார்கள்.

மாகாணங்களில் ஏற்படும் பாதுகாப்புப் படைகள் சம்பந்தமாகவும் யுத்த ஏற்பாடுகள் சம்பந்தமாகவும் காங்கிரஸ் காரர்கள் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதைக் காரியக் கமிட்டியிலர் தங்கள் தீர்மானத்தில் எடுத்துச் சொல்வார்கள் என்றுத் தெரிகிறது.

வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக அங்கத்தினர்கள் இதுவரை விரிவுமாக எவ்வித ஆலோசனையுஞ்செய்யவில்லை. பம்பாயில் லீக் நிருவாக சபை கூடி நிறைவேற்றிய தீர்மானத்தைப் பற்றியும் இதுவரை அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

காந்திஜீ கருத்துக்கு ஆதரவு

வார்தா ஜூன் 18

காரியக்கமிட்டிக் கூட்டத்தில் அங்கத்தினர்கள் அனைவரும் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டபின், காந்திஜி எல்லாவற்றையும் நிரட்டி எடுத்துச் சொன்னார். இனி, காந்திஜி ஒரு தீர்மானம் தயாரிப்பார் எனத் தெரிகிறது. மாகாணங்களில் உத்தியோக முறையில் ஏற்பட்டிருக்கும் பாதுகாப்புப் படைகளிற் காங்கிரஸ் காரர்கள் கலக்கக்கூடாதெனச் சொல்லப்படும் என்று தெரிகிறது. ராஜாஜி சார் பாகப் பாதுகாப்புப் படைகளைத் நிரட்டலாமா என்ற ஆலோசனையும் நடந்ததாகத் தெரிகிறது. ஆனால் அதைப்பற்றி ஒரு முடிவும் செய்யப்படவில்லை. யுத்த நிதிக்குப் பணம் உதவுவதைப் பற்றிக் கமிட்டியின் தீர்மானத்தில் பிரஸ்தாபம் இருக்குமோ இருக்காதோ தெரியவில்லை.

சட்டமறுப்பைத் தற்காலம் ஆரம்பிக்கக்கூடாதென்றும் பிரஜா உரிமைக்கு அதிகமாகப் பங்கம் நேரும் வரை அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமென்றும் மகாத்மா கூறுவதைக் கமிட்டி அங்கீகரிக்கும் என்றுத் தெரிகிறது. ஒரே மாதிரி கூட்டத்தில் தான் கமிட்டி முடிவுக்கு ஒரு தீர்மானம் ஆலோசிக்கவேண்டுமென்று திருப்பேனும் திரு. மஸானியும் விவாதித்தும் ஏவ்வித பிரயோஜனமும் ஏற்படவில்லை.

ஞாயிற்றுக்கிழமை கூடிய மந்திரி சபைக் கூட்டத்தில் தான் ஜெர்மனியுடன் போக்கவரத்தை நடத்துவதற்கு இணங்கக்கூடிய மந்திரிகளைக் கொண்ட ஒரு புதிய மந்திரி சபையை அமைப்பதென்று இறுதி யாகத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கத் சந்தர்ப்பத்தில் சாத்திய மில்லையென்றே தெரிகிறது. பிரிட்டிஷ் அரசாங்கம் சர்வதேச நிலையைக் கருதிச்சில தினங்கள் காலம் கொண்டிடா இந்தியாவுக்குச் சுயநிர்ணய உரிமை அளிக்க இன்னமும் இணங்கவில்லை.

இன்று பகல் கூட்டத்தில் டில்லி சம்பவங்களைப் பற்றியும் மறுபடியும் விவரங்கள் நடந்ததாகத் தெரிகிறது.

பிரஞ்சு இராணுவம் தோற்றதேன்?

அரசியல் இராணுவ அபிப்பிராய பேதங்களே பிரதான காரணங்களாம்

லண்டன், ஜூன் 21—

பிரான்ஸிலுள்ள ரய்ட்டர் கிருபர் எழுதுவதாவது:—

இரோப்பாவிலேயே மிகவும் சிறந்ததான பிரஞ்சு இராணுவம் தோற்றடிக்கப்பட்டதற்கும், அதன் விளைவாகச் சத்துருவிடமிருந்து சரணாகதி அடையக்கூடிய முறையில் பிரஞ்சு அரசாங்கத்தார் கடலடிக்கை எடுக்கத் துணிந்ததற்கும் பின் வரும் இரு காரணங்கள் கூறப்படுகின்றன.

1. பிரஞ்சு ஜெனரல்கள் இராணுவப் பலப்பலபற்றிக் கொண்டிருந்த தவறான அபிப்பிராயங்கள்.

2. அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்டிருந்த ஆழமான பிளவுகள்.

இராணுவத்துறையிற் கூறப்புள்ள பிஞ்சு ஜெனரல்கள், டாங்கிகள் விமானங்கள் ஆகியவைகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளாமல், துள் பலத்திற்கும் பீரங்கிப் பலத்திற்கும் அவைகளின் துணைக் கருவிகளாகவே தமக்குக் கருதி வந்தார்கள். நிலம் நிலையிற் பெரிய பாதுகாப்புக் கோட்டைகளிலிருந்து கொண்டு யுத்தம் செய்து வெற்றி பெறமுடியாமல் மென்று அவர்கள் நம்பினார்கள்.

60 மைல் முனையில் 4000 டாங்கிகள்

இப் பலவீனத்தை அறிந்து கொண்ட ஜெர்மனியர் தங்கள் இயக்கிர சாதனப் படைகளை அதிகரித்துக்கொண்டு டாங்கிகள் மலைகளிலாக ஆயிரக்கணக்கிற் குவித்தனர். 60 கமல் நீளமுள்ள ஒரு பேர் முனையில் மாத்திரம் 4000 டாங்கிகளவரை உபயோகிக்கப்பட்டன.

பிஞ்சுக்காரர்களிடையே கட்டுப்பாடு குலைவுண்டு என்றுமும் டன்கர்க் முதலிய இடங்களிற் பெருவாரியான உயிர்சேதம் ஏற்பட்டது. கடைசி கோதத்தில் பிரஞ்சுத் துருப்புகள்சுக்கு இராணுவங்களாவப் பிரிக்கப்பட்டு விட்டனர், எனவே, இந்த இராணுவங்களிடையேயுள்ள தொடர்பு அறுந்து விட்டது. மாலினு அரணில் 4 மாதத்திற்குரிய உபகரணங்கள் இருக்கின்றன. ஆனால், அவைகள் இப்பொழுது சத்துருவசமாகிவிட்டது. இது வெற்றிக்கக் கடந்த நாட் பகுதி ஒட்டமே நமிர வேறில்லை, இதில் ஜேர்மனி வெற்றி பெற்று விட்டது.

நம்பிக்கை தகர்ந்தது

டாங்கிகளும் விமானங்களுர் பிரான்ஸிலிடம் பேதிய அளவு இல்லாமற் போனதே பிரான்ஸின் தோல்விக்குக் காரணமாகும். பரிஸ் நகரைவிட்டு வெளியேறி விடுவதென்று அரசாங்கத்தார் தீர்மானித்த பொழுதே பெரும்பான்மையின் நம்பிக்கையில் ஒடிழந்துவிட்டது. அரசாங்கம் டுவைசர் பேச்சுவார்த்தையும் சரணாகதி அடையும் செய்திகள் பரவ ஆரம்பித்தன.

அபிப்பிராயபேதம்.

டூன் கார்ல் மார்ஷல் பெட்டேயும் ஜெனரல் வேகான்டும் பின் வருமாறு யோசித்தார்கள்.

எதிர்பக்கத்தில்உள்ள சத்துரு ஜெனரல்களை நாம் ஒரு சேனை சென்ற முறையில் அணுகுவோம். யுத்த நிறத்த ஒப்பந்தத்தை அவர்களுடன் பிரான்ஸின் கௌரவம் பாதுகாக்கப்படக்கூடும். வீரர்கள் படுகொலை செய்யப்படுவதைப் நிறுத்தலாம்".

"சோவிச்சர்களுடன் நாங்கள் ஒருங்கும் போவதில்லை. ஆனால் ஹிட்லருடன் ஒருங்கும் போகிறோம்" என்பதை மனத்தில் கொள்ள வேண்டுமென்று திரு. பேயோனும் திரு. மான்டேலும் விவாதித்தும் ஏவ்வித பிரயோஜனமும் ஏற்படவில்லை.

ஞாயிற்றுக்கிழமை கூடிய மந்திரி சபைக் கூட்டத்தில் தான் ஜெர்மனியுடன் போக்கவரத்தை நடத்துவதற்கு இணங்கக்கூடிய மந்திரிகளைக் கொண்ட ஒரு புதிய மந்திரி சபையை அமைப்பதென்று இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டது.

இன்று பகல் கூட்டத்தில் டில்லி சம்பவங்களைப் பற்றியும் மறுபடியும் விவரங்கள் நடந்ததாகத் தெரிகிறது.

யுத்தத்துக்கு உதவி செய்ய வழிகள்

கல்லூரிப் பரிசளிப்பில் தோர்த்பதி சொற்பொழிவு

நுகோகொடையிலுள்ள தெர்ஸ்டோன் கல்லூரியின் பரிசளிப்பு விழாவுக்கு வேற்றியாழிசிழமையன்று கொழும்பு பிஷப் சங்கை டக்ளஸ் ஸி. டி. தோர்ன்லியின் தலைமையில் நடைபெற்றது.

மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கியதன் பின், மேஜர் தோர்த்பதி இந்தக் கூட்டத்திற் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

இங்காட்டு மக்களில் 100 க்கு 90 பேரும் பரிபூரண ராஜவிசுவாசமுள்ளவர்களேயன்று எனக்கு கிச்சயமாகத்தெரியும். இப்பொழுது மரித்த சமூகத்தின் சுதந்திரத்திற்காக நடைபெறவரும் யுத்தத்தில் இலங்கையிலுள்ள நாம் எந்தவகையில் உதவி புரிய முடியுமென்பது பற்றி நான் உங்களிடம் சிலவோர்கள் கருவிரும்புகின்றேன்.

பிராயுதன் ஒழிக்கச் சமூக ஒற்றுமை உண்டுபண்ண வேண்டிய அவசியத்தை நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு எடுத்துக் கூறினேன். தாய்புத்துன்மாகக் கிளப்பப்படும் வதந்திகளை நீங்கள் எவரும் கவனிக்கக்கூடாது.

இத்தகைய வதந்திகளின் காரணமாக நமது சேனையலவங்கியிற் பணம் போட்டிருந்த பலர் தங்களுடைய பணங்களைத் திரும்ப வாங்கிக்கொண்டுவிட்டதாகக் கேள்விப் பட்டேன். ஒருவர் ஒருநாட்டாலயில் சேவியை வகையிலிருந்த 500 ரூபாவைத் திருப்பி எடுத்தாலின், அதோர் மத்தியானம் அவர் வீட்டிலிருந்து அப்பணம் திருட்டுப்போய் விட்டதாம். மற்றொருவர் வீட்டிற் கட்டுக்கட்டாகக் கட்டி வைத்திருந்த ரூபாய் நோட்டுகளைக் கறையான் அரித்துவிட்டதாம்.

பொய் வதந்திகளைப் பரவாமல்தடுப்பது யுத்தத்திற்காக நாம்செய்யக்கூடிய உதவிகளில் ஒன்றாகும். இன்னும் யுத்த உதவிக்காகத் திரட்டப்பணம் ஏராவது நிதிக்குத் தாராளசித்தமுடன் பணம் கொடுத்து உதவலாம். கடைசியாக நமது சேனவுகளை மிதப்படுத்துவதற்கு ஆடம்பரச் செலவுகளை விட்டு விட வேண்டும்.

வைஸ்ராயின் மகனைக்காணவில்லை

யுத்தக் கைதியாயிருக்கலாம் என்ற ஊகம்

லிம்லா சனிக்கிழமை

வைஸ்ராயின் கிரேஷட் புதல்வராகிய மேஜர்பட்டின் ஸ்ல் லப்டிவ லோதியன் காணுமற் போய்விட்டாரென்று வைஸ்ராய்க்கு ஒருகந்த கிடைத்திருக்கிறது. அவர் யுத்தக் கைதியாகப் பட்டிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. எனினும் இன்னும் உதநிர்யாகமுறையில் ஏவ்வித விபரமான தகவலும் கிடைக்கவில்லை.

வின்ஸர்கோமகன் ஸ்பெயினில் மனைவியோடு சேமமாக வாழ்கின்றார்

அவரைக் கைது செய்ய உத்தரவுஎன்ற விஷமவுரை

லண்டன் ஜூன் 21௳

வின்ஸர் கோமகன் தம்பதிகள் இன்று ஸ்பெயினைச் சேர்ந்த பார்ஸிலோனு கடுக்குச் சேமமாக வந்து சேர்ந்தனர். வின்ஸர் கோமகனைக் கைதுசெய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று இதுவரை பரவிய செய்திகள் அனைத்தும் பொய்யானவை என்று கோமகனுக்கு நெருங்கிய உறவினரான ஒருவர் கூறினார்.

அவருடைய பாதுகாப்புக்கும் வசதிகளுக்கும் ஏகல ஏற்பாடுகளும் செய்து வரப்படுகின்றன.

காந்திஜீக்குக் கிராமதானம்

ராம்நகர் ராச தன்கொடை

ராம்நகர் ராச மகாத்மாவுக்கு 30,000 ரூபா மதிப்புள்ள ஒரு கிராமத்தைத் தானமாக வழங்கப் போவதாகப் பெதுக்கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். அதன் பெயர் "ரிஷிநாரா" என்பது. சம்பரன் சத்தியாக்கிரகத்தில் மகாத்மா அக்கத் கிராமத்திற் பல நாள் தங்கியிருந்தார்.

'நாம் ஜெயிக்காவிடில் உலகில் இருள் சூழும்'

பிரான்ஸில் தோல்வி ஏற்பட்ட காரணம்

—0—

பிருத்தானிய படைப்பலத்தைப் பிரதம மந்திரி விளக்குகிறார்

அச்சத்துக்குச் சிறிதும் காரணமில்லை

லண்டன் ஜூன் 18

பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் இன்று காமன்ஸ் சபையில் யுத்த நிலையைப் பற்றி முக்கியமானதொரு அறிக்கையை வெளியிட்டார்.

'பிரிட்டனுக்குப் பிரான்ஸுக்கு முள்ள ஒப்பந்தங்களிலிருந்து பிரான்ஸை விடுவிப்பது சாத்தியமில்லை. பிரான்ஸ் அந்த ஒப்பந்தங்களைப் பிரயுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவிடில் பெரிய சர்தாப்பங்களைக் கை விடுவதன்றி எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனுகூலங்களையும் இழக்க நேரிடும்.

தாய்நாட்டையாக கொதுபடை வரிசைகளில் ஏற்பட்ட பிளவு காரணமாகவும், எதிரியின் எதிர் பாராத ஆயுதம் தாங்கிய படை பலத்தின் காரணமாகவும், ஜெர்மன் படைகளின் வரலாறான தொகை காரணமாகவும் பிரான்ஸ் யுத்தத்தில் தோல்வியேற்றட்டது.

நாம் பெருமுயற்சியுடனும் உஷாராகவும் நடந்து கொள்ளக் காரணமிருக்கிறது. ஆனால், அச்சத்துக்குச் சிறிதும் காரணமில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இன்னும் ஆயிரவருஷகாலம் இருக்கலாம் இந்தச் சந்தர்ப்பத்தைக் குறிப்பிட்டு "இதுவே முக்கிய சமயம்" என்று கூறத்தக்கபடி நாம் நமது கடமையைச் செய்வோமா!

எதிரிகளால் ஜெயிக்கப்பட்ட நாடுகள் மீண்டும் சுதந்திரநாடாக பெற வேண்டுமென்ற கோரிக்கையையா விடப்போவதில்லை. பிரான்ஸ் யுத்தம் முடிந்து விட்டது. பிரிட்டன் யுத்தம் ஆரம்பிக்கப்போகிறது. இதில் நாம் தோற்றுவிட்டால் அமெரிக்கர்களாகிய நாங்கள் உலகிலே அச்சுதந்தரத்தில் வாழ்கிறோம் என்ற சரித்திரம் தெரிவிக்கிறார்.

பிரிட்டிஷ் படை பலம்

பிரிட்டிஷ் படை பலத்தைப் பற்றியும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் நில முக்கியமான விஷயங்களைத் தெரிவித்தார்.

பிரான்ஸுக்கு அனுப்பப்பட்ட ஜாதிப்படையில் எட்டில் ஏழு பங்கு துருப்புகள் பிரிட்டனுக்குத் திரும்பி வந்து விட்டன. இவர்களின் தொகை 3,50,000. இப்பொழுது பிரிட்டனில் 12,50,000 பேர்கள் ஆயுதங்களில் இருக்கின்றனர் 5,00,000 தரைப்படை தொடர்ந்தும் இருக்கின்றனர். ருஷியாற்படைகளும் இருக்கின்றன. கனடா தொத்துருப்புகள் பிரான்ஸிலிருந்து இரு கினர். ஆனால் அவர்கள் பத்திரமாகப் பிரிட்டனுக்குத் திரும்பி விட்டனர். பிரிட்டன் மீது படையெடுக்க வேண்டுமானால் எதிரிகளின் படை மிகப் பெரிதாக விருக்க வேண்டும். கடுக்குக் கப்பற்படை வேறு இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மூடுபனியில் பல விடங்களில் 10,000 பேர் இறங்குவதில் அவர்களை விமானங்களுக்கு நெருங்கு தரக்குவதைத் தடுப்பதாகக் கடற்படை உத்தரவாதம் செல்லவில்லை. ஆயினும் சாங்க்டெடைன் நிட்டம் ஒன்றும் சுமக்கிருக்கிறது. பிரிட்டிஷ் விமானப் படையை நிஜமாகவே ஒரு படையெடுப்பு இருக்கவியலவில்லை. பிரிட்டிஷ் விமானப்படை ஜெயிக்கப் பட்டாலதன் விமானங்களிலிருந்து பிரிட்டன் தாக்கப்படலாம்.

ஜெர்மன் விமானபடையைக் காட்டிலும் பிரிட்டிஷ் விமானப் படை பலமானது. இதுவிஷயத்தில் வெற்றி ஏற்படத் தகுந்த காரணங்களிருக்கின்றன. பிரெஞ்சு இராணுவ ஏற்பாடு முடிந்துவிடுமென்ற நிட்டமாகக் கூறவும் முடியாது என்று பிரதம மந்திரி குறிப்பிட்டார்.

ரோமத்தைத் தானமாக வழங்கப் போவதாகப் பெதுக்கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். அதன் பெயர் "ரிஷிநாரா" என்பது. சம்பரன் சத்தியாக்கிரகத்தில் மகாத்மா அக்கத் கிராமத்திற் பல நாள் தங்கியிருந்தார்.

அமெரிக்கஉதவிக்குப் பிருத்தானிய நன்றி

யுத்தமுடிவு இன்னும் ஆறுமாதத்தில் தெரியும்

போராட்டத்தைநடத்தப் பிரிட்டனின் உறுதி

லோர்டு லோதியன் பிரசங்கம்

லண்டன் ஜூன் 19—

அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகராக லோர்டு லோதியன் சேர் சர்வவல்சாலை தமக்களித்த பாராட்டர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு பேசுகையில் பின்வருமாறு தெரிவித்தார்:—

விமானங்கள், யான என்னெங்கள் யுத்தத் தளவாடங்கள் முதலியவறறைக் கொடுத்து நீங்கள் செய்துள்ள உதவிக்கு காங்கள் கன்றியுறிதலுள்ளவர்களாக விருக்கின்றோம். நீங்கள் எவ்வளவு கேசிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் உங்களாலான அநிகப்படி உதவியைச் செய்யவேண்டும். ஹிற்லரை வரை காங்கள் எதிரியைச் சமாளித்து நின்றுவிட்டால் ஹிட்லரும் அவரது மிருகத்தனமான பலாத்காரமும் நம் காட்டைவிட அல்லது கட்சிகளை நாம் தோற்கடிக்க முடியாதென்பதைக் காட்டமுடியும். ஹிட்லர்இப்படியே சென்று கொண்டிருக்க முடியாது. ஆகிய ஒருவருஷம் இரண்டு வருஷம் மூன்று வருஷமல்ல அடுத்த ஆறு மாதங்களுக்குளளேயே பிரசினை தீர்க்கப்பட்டு விடும். இன்னு முடிவு எங்களைப்போல் உங்களையும் பாதிக்கும். ஹட்லர்எங்களுடைய கடற்படையைப் பிடித்து நாசம் செய்து விட்டால் சென்ற 120 வருஷங்களாக வந்த சுதந்திர அன்னியாதிக்கத்தின் மீது நமது இரு தேசங்களின் பாதுகாப்பும் இருக்கிறதோ அது நிலை மறைந்து விடும்.

பிரிட்டனின் உறுதி

லோர்டு லோதியன் மேலும் பேசுகையில் பிரிட்டிஷ் கடற்படை இங்கிலீஷ் கால்வாய் ஸ்ப்ரான்ட் முதலிய விடங்களைப் பாதுகாக்கும் வகையில் அட்லாண்டிக்கை சமுத்திரத்தைப் பாதுகாக்கும் பிரசினை அமெரிக்காவுக்கு இல்லை யென்றும் ஜனாயகத்திற்கு விரோதமான ஒரு நாடு இரு நாடுகளைப் பிடித்துக் கொண்டிருக்கையில் அமெரிக்காவின் பாதுகாப்பு வேறுவிதமாகப் போய் விடுமென்றும் பிரிட்டன் இறுதியாயில் உதவியுடன் போராடுமென்றும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் அமெரிக்காவிற்கும் பிரிட்டன் கப்பல்சாமான்கள் கடற்படைப் பலத்துடன் இருந்து வருவதே பெரிய மாமிஷட் அவைபோன்ற தென்றும் தெரிவித்தார்.

நாம் தோற்கடிக்கப்பட்டு நமது கடற்படையின் பெருப்பாம் அழிந்து போனால்தான் பாகியிருப்பவை கானடா, ஆஸ்திரேலியா, கிழக்கிலுள்ள தேச ஆப்பிரிக்கா முதலிய சாம்ராஜ்ய நாடுகளுக்கும் இந்துமகா சமுத்திரத்தினுள்ள சாம்ராஜ்யநாடுகளுக்கும் உதவி செய்யப் புறப்படும். பிரான்சுக்குச் செய்ததையே ஹிட்லர் இன்னும் சில தினங்களிலோ அல்லது வாரங்களிலோ பிரிட்டனுக்குச் செய்யலாம். வடக்கு மேற்கு தெற்கு முன்ற திசைகளிலும் விமான மூலமும் படையெடுப்பு மூலமும் ஹிட்லர் பிரிட்டனைத் தாக்கலாம். அவரதியமுன்டாகும் படி நான் ஒன்று சொல்ல விரும்பவில்லை. ஆனால் பிரதான விஷயங்களைக் கவனிக்க வேண்டும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தி லுள்ளவர்கள் மனத்தளர்ச்சி யடையவில்லை. ஹிட்லர் படையெடுத்தால் பிரிட்டிஷ் மக்கள் சரியானபடி எதிர்த்துப் போராடுவார்கள். எனெனில் இன்று உலகில் சுதந்திரத்திற்குப் பெரிய ஆபாஞ்சு வருப்பது பிரிட்டனின் சுதந்திரமதான்" என்று லோர்டு லோதியன் முடிவாகக் கூறினார்.

பிரஞ்சுப் பெண்களும் யுத்தமும்

